TAMIL NADU LEGISLATIVE ... MADRAS-600 009
9 - JUN 1982

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1981 மார்ச் 24.

பங்குனி 11, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

“ இளைதாக முள்மரம் கொல்க, களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து ”.

முள்ளையுடைய மரத்தை அது சிறியதாக இருக்கும்போதே களைந்து எறிதல் வேண்டும். அது முதிர்ந்தபோது தன்னை வெட்டுகிறவர்களின் கையையே வருந்துமாறு செய்யும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மறைமலை நகரில் டான்சி தொழிற்சாலை.

*வினா எண். 452—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள மறைமலை நகரில் டான்சி தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) கட்டிட வேலை முடிவுபெற்றதா ?

(ஈ) தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்போது கிண்டியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் டான்சியின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு மோபெட்ஸ்க்காக மறைமலை நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைக்கான கட்டுமான வேலைகள் 1976ஆம் வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) ரூ. 17,39,000.

[1981 மார்ச் 24

(இ) வடக்குப்புறம் ஒளிக்கண்ணாடி பதித்தல் மற்றும் மின் கம்பிகள் இழுத்தல், ஓய்வுக் கூடத்திற்கான மின் இணைப்பு ஆகியவைகளைத் தவிர மற்றபடி, தொழிற்சாலைக் கட்டுமான வேலைகள் முடிவடைந்துவிட்டன.

(ஈ) இத்திட்டம் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தொழிற் பிரிவுகளில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் தேதியி லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மறைமலை நகரில் எழுப்பப்படும், அதன் நிரந்தர தொழிற்சாலைக் கட்டடங்கள் மற்றும் மின் வசதிகளுக்கான வேலைகள் முடிவடைந்த பின் இத்திட்டம் அங்கு செயல்படும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 1976 ஆம் ஆண்டிலே அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 1976 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டிடம் இதுவரையில் கட்டப்பட்ட கட்டிடமாக இருக்கிறதே தவிர அந்தக் கட்டிடத் தில் தொழிற்சாலை தொடங்கப்படவில்லை. காலியாக இருக் கும் அந்தக் கட்டிடத்தில் பலர் புகுந்து அசுத்தப்படுத்தவும் நாசப்படுத்தவும் செய்கிறார்கள். அது மட்டுமல்ல. குறிப்பாக அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விரைவில் அது ஆரம்பிக்கப்படும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: துணைத் தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று சொன் னார்கள். அதுவும் எப்போது என்று சொல்லவில்லை. மறை மலை நகரில் ஆரம்பிக்கப்படும் அந்தத் தொழிற்சாலையில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும்? அந்தத் தொழிற்சாலையில் என்னென்ன உறுப்புகள் தயாரிக்கப்படும்? அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போது அந்தப் பகுதியி லுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவ ரவர்களே, எவ்வளவு பேர்களுக்கு அந்தத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு நல்க முடியும் என்று இப்போது அறுதியிட்டுச் சொல்லமுடியாது. ஆனால் அந்தத் தொழிற்சாலை தொடங் கும்போது அங்கே 20,000 மோபெட்ஸ் வாகனங்கள் தயாரிக்கும் ஒரு தன்னிறைவு நிலையமாக அதை ஆக்குவதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப் பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.